"மழை நீரை சேமிப்போம்"

# ஆவடி மாநகராட்சி

## 2022-2023 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை

### 1. அமைப்பும் நிர்வாகமும்

1. ஆவடி நகரியம் தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை ஆணைப்படி 19.11.1970 முதற்கொண்டு நகராட்சியாக உயர்த்தப்பட்டது.

2. 28.01.1971 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக உள்ளாட்சித்துறையின் 31.12.1970ந் தேதிய 2782 எண் அரசாணைப்படி உயர்த்தப்பட்டது.

3. அதன் பிறகு 30.06.1971ந் தேதிய அரசினரின் உள்ளாட்சித் துறை ஆணை எண்.511ன் படி 01.07.1971 முதல் இரண்டாம் நிலை நகராட்சி நகரியமாக மாற்றி உத்திரவிடப்பட்டது.

4. 06.03.1975–ந் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 380 எண் ஆணையின்படி 01.04.1975 முதல் தேர்வுநிலை நகராட்சி நகரியமாக உயர்த்தி உத்திரவிடப்பட்டது.

5. அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 31.01.1994–ந் தேதிய 29 எண் ஆணைப்படி 01.02.1994 முதல் தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

6. அரசாணை (நிலை) எண்.238, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 02.12.2008–ன்படி பெருநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

7. ஆவடி மாநகராட்சியாக தமிழ்நாடு அரசிதழில் தரம் உயர்த்தப்பட்டது எண்.258, நாள்.17.06.2019.

8. தமிழ்நாடு அரசிதழ் எண்.315, நாள் 30.07.2019.

9. ஆவடி மாநகராட்சி சட்டம் 2019 (Tamil Nadu Act 24 of 2019)

10. அரசாணை நிலை எண்.108, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.அ-3) துறை நாள்.23.11.2021.

### 2. ஆட்சி எல்லை

இம்மாநகராட்சியின் எல்லை கீழ்க்குறிப்பிட்டுள்ள ஒன்பது வருவாய் கிராமங்களை முழுமையாக கொண்டுள்ளதாகும்

1. பருத்திப்பட்டு
2. பாலேரிப்பட்டு
3. விளிஞ்சியம்பாக்கம்
4. சேக்காடு
5. முத்தாபுதுப்பேட்டை

6. தண்டுரை
7. மிட்டிணமல்லி
8. கோயில்பதாகை
9. திருமுல்லைவாயல்

இம்மாநகராட்சியின் பரப்பளவு 65 சதுர கிலோமீட்டர்களாகும்.

இம்மாநகராட்சியின் எல்லையில் அறிக்கை ஆண்டில் மாறுதல் ஏதும் இல்லை.

இம்மாநகராட்சியின் மக்கள் தொகை 1991–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1,83,215 ஆகும். 2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 2,29,403 ஆகும். 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 3,44,701 ஆகும்.

## 3. தேர்தல்கள்

அரசினர் 7.9.2006 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை ஆணை எண். 87.ன்படி மக்கள் தொகை அடிப்படையில் இந்நகராட்சியை 48 வார்டுகளாக பிரித்து அதில் கீழ்க்கண்ட விபரப்படி பெண்களுக்கும் மற்றும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்களுக்கும் வார்டுகள் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

➢ **<u>பொது வார்டுகள்</u>**

1,2,8,9,10,13,23,24,25,27,28,29,30,31,32,33,40,42 மற்றும் 48.

➢ **<u>பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட வார்டுகள்.</u>**

6,7,11,12,16,17,20,22,26,34,35,36,38,39,41,43,44,45,46 மற்றும் 47 .

➢ **<u>தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி மக்களுக்காக ஒதுக்கப்பட்ட வார்டுகள்.</u>**

3, 14, 21 மற்றும் 37.

➢ **<u>தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட வார்டுகள்.</u>**

5, 15, 18 மற்றும் 19.

உள்ளாட்சி தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் 28.01.2022 முதல் 04.02.2022 வரை நடைபெற்றது.

தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஆய்வு 05.02.2022 அன்று மேற்கொள்ளப்பட்டது.

உள்ளாட்சித் தேர்தல் போட்டியிலிருந்து விலகுவதற்கான அறிவிப்பை 07.02.2022 அன்று பிற்பகல் 3.00 மணி வரை உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் எழுத்து பூர்வமாக அளிக்கப்பட்டது.

உள்ளாட்சித் தேர்தல் 19.02.2022 அன்று காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெற்றது.

உள்ளாட்சித் தேர்தல் வாக்கு எண்ணிக்கை 22.02.2022 அன்று நடைபெற்றது.

ஆவடி மாநகராட்சியில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவி பிரமாணம் எடுத்துக் கொள்வதற்கான முதல் கூட்டம் ஆவடி மாநகராட்சி அலுவலகத்தில் 02.03.2022 அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை–600 106 அவர்களின் சுற்றறிக்கை என்.யு–35/2022–ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாநகராட்சி மேயர் மற்றும் துணை மேயர் ஆகியோரை தேர்ந்தெடுக்கும் மறைமுக தேர்தல் 04.03.2022 அன்று நடைபெற்றது.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாநகராட்சி மேயர் மற்றும் துணை மேயர் ஆகியோரை தேர்ந்தெடுக்கும் மறைமுக தேர்தல் 04.03.2022 அன்று நடைபெற்றதை தொடர்ந்து ஆவடி மாநகராட்சியின் முதல் மேயராக **திரு.கு.உதயகுமார்** அவர்களும் **துணை மேயராக திரு.ச.சூர்யகுமார்** அவர்களும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை – 600 106 அவர்களின் சுற்றறிக்கை என்.யு–43/2022–ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டுகள் குழு தலைவர்கள் மற்றும் நிலைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் மறைமுக தேர்தல்கள் 30.03.2022 அன்று நடைபெற்றது.

**வார்டுகள் குழு:–**

ஆவடி மாநகராட்சியின் வார்டு குழு தலைவர்கள் தேர்தல்களில் (மறைமுக தேர்தல்) மண்டலம் –1 தலைவராக திருமதி.வி.அம்மு அவர்களும், மண்டலம்–2 தலைவராக திருமதி.எஸ்.அமுதா அவர்களும், மண்டலம்–3 தலைவராக திரு.கோ.ராஜேந்திரன் அவர்களும், மண்டலம்–4 தலைவராக திருமதி.என்.ஜோதிலட்சுமி அவர்களும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆவடி மாநகராட்சியின் நிலைக்குழுக்களின் உறுப்பினர்கள் மறைமுக தேர்தல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை–600 106 அவர்களின் சுற்றறிக்கை என்.யு–43/2022 –ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு 30.03.2022 அன்று நடைபெற்றது.

ஆவடி மாநகராட்சியின் நிலைக்குழு தலைவர்களுக்கான மறைமுக தேர்தல்கள் 31.03.2022 அன்று நடைபெற்றதில் கணக்குக்குழு தலைவராக திரு.அ.வீரபாண்டியன்

அவர்களும், பொது சுகாதார குழு தலைவராக மரு.க.ராஜேஷ் குமார் அவர்களும், கல்விக்குழு தலைவராக திருமதி.யு.கீதா அவர்களும், வரிவிதிப்பு மற்றும் நிதி குழு தலைவராக திருமதி.சு.சுந்தரி அவர்களும், நகரமைப்பு குழு தலைவராக திருமதி.பி.மாலா அவர்களும், பணிகள் குழு தலைவராக திரு.சா.நா.ஆசிம்ராஜா அவர்களும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை – 600 106 அவர்களின் சுற்றறிக்கை என்.யு43/2022–ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மறைமுக தேர்தல்கள் 31.03.2022 அன்று நடைபெற்றதில் நியமன குழு உறுப்பினராக திருமதி.டி.சுமதி அவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆவடி மாநகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர், துணை மேயர், மண்டல தலைவர்கள், நிலைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் முதல் மாமன்ற அவசர கூட்டம் 11.04.2022 அன்று நடைபெற்றது.

அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்ட விபரப்படி நகர் மன்ற கூட்டங்கள் நடைபெற்று பொருள்களின் பேரில் முடிவெடுக்கப்பட்டது. ...

➢ **<u>குழுக்கள்</u>**

தேர்ந்தெடுக்கப்பட்ட நிலைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள்.

**கணக்குகள் குழு.**

**<u>தலைவர்:</u>** வீரபாண்டியன் அ

| வ. எண் | பெயர் | வார்டு எண் | பாலினம் | த/க பெயர் | கட்சி | தேர்ந்தெடுக்கப்பட்ட விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வீரப்பாண்டியன் அ | 21 | ஆண் | அம்மாவாசி | தி.மு.க | Unopposed |
| 2 | ஆறுமுகம் பெ | 3 | ஆண் | பெருமாள் | தி.மு.க | Unopposed |
| 3 | ரமேஷ் பொ | 37 | ஆண் | பொன்னுரங்கம் க | தி.மு.க | Unopposed |
| 4 | அழகு விஜயா வி | 47 | பெண் | டி வின்செண்ட் நவராஜ் | தி.மு.க | Unopposed |
| 5 | சசீகலா ஏ | 45 | பெண் | ஆனந்தன் பி | தி.மு.க | Unopposed |
| 6 | செல்வி ரா | 43 | பெண் | ராஜேந்திரன்.எம் | தி.மு.க | Unopposed |

## நியமனக்குழு:

| வ. எண் | பெயர் | வார்டு எண் | பாலினம் | த/க பெயர் | கட்சி | தேர்ந்தெடுக்கப்பட்ட விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சுமதி டி | 44 | பெண் | என் அருள்மொழி ராஜராஜன் | தி.மு.க | Unopposed |

## கல்விக் குழு:

**தலைவர்: கீதா யு**

| வ. எண் | பெயர் | வார்டு எண் | பாலினம் | த/க பெயர் | கட்சி | தேர்ந்தெடுக்கப்பட்ட விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | கீதா யு | 35 | பெண் | யுவராஜ் பா | தி.மு.க | Unopposed |
| 2 | மேகலா சீனிவாசன் | 38 | பெண் | சீனிவாசன் பு | இந்திய தேசிய காங்கிரஸ் | Unopposed |
| 3 | கார்த்திக் காமேஷ் ர | 48 | ஆண் | பி ரவி | MDMK | Unopposed |
| 4 | ஹரி வே | 33 | ஆண் | வேனு நாயக்கர் சி | தி.மு.க | Unopposed |
| 5 | சுதாகரன் ஆர் | 32 | ஆண் | ஆர்.ராஜாரத்தினம் | தி.மு.க | Unopposed |
| 6 | சாந்தி பா | 41 | பெண் | பாண்டியன் மு | விடுதலை சிறுத்தைகள் கட்சி | Unopposed |

## பொது சுகாதார குழு

**தலைவர்: ராஜேஷ் குமார் க**

| வ. எண் | பெயர் | வார்டு எண் | பாலினம் | த/க பெயர் | கட்சி | தேர்ந்தெடுக்கப்பட்ட விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ராஜேஷ் குமார் க | 14 | ஆண் | கு கணேசன் | அ.தி.மு.க | Unopposed |
| 2 | செண்பகவள்ளி ர | 5 | பெண் | ரவிச்சந்திரன் | தி.மு.க | Unopposed |
| 3 | பைரவி ஜா | 6 | பெண் | ஜானகிராமன் மு | தி.மு.க | Unopposed |
| 4 | மீனாட்சி கே | 46 | பெண் | எம் குமார் | தி.மு.க | Unopposed |
| 5 | வெங்கடேசன் ஞா | 31 | ஆண் | ஞானபிரகாசம். வ | தி.மு.க | Unopposed |
| 6 | பரிமளா. சு | 11 | பெண் | சுப்பிரமணி. ஜி | MDMK | Unopposed |

## வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு

தலைவர்: சுந்தரி சி

| வ. எண் | பெயர் | வார்டு எண் | பாலினம் | த/க பெயர் | கட்சி | தேர்ந்தெடுக்கப்பட்ட விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சுந்தரி சி | 12 | பெண் | சிங்காரம் . வீ | தி.மு.க | Unopposed |
| 2 | சுகன்யா ச | 18 | பெண் | சதீஷ் குமார் வே | தி.மு.க | Unopposed |
| 3 | பெருமாள் பி பி | 24 | ஆண் | பிரவியன் | தி.மு.க | Unopposed |
| 4 | வெங்கடேசன் உ | 27 | ஆண் | கே.உலகநாதன் | தி.மு.க | Unopposed |
| 5 | செல்வம் சே | 30 | ஆண் | வி.சேது | தி.மு.க | Unopposed |
| 6 | யாஸ்மீன் பேகம் எச் | 36 | பெண் | ஹாஜா செரிப் ஏ | தி.மு.க | Unopposed |

## நகரமைப்பு குழு

தலைவர் : மாலா பி

| வ. எண் | பெயர் | வார்டு எண் | பாலினம் | த/க பெயர் | கட்சி | தேர்ந்தெடுக் கப்பட்ட விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மாலா பி | 26 | பெண் | ச.பிரகாஷ் | தி.மு.க | Unopposed |
| 2 | கோவிந்தராஜ் சு | 2 | ஆண் | சுப்புராயிலு எஸ் | தி.மு.க | Unopposed |
| 3 | ரவி கோ | 40 | ஆண் | கோதண்டன் டி.எம் | தி.மு.க | Unopposed |
| 4 | ஜெயபிரியா ப | 7 | பெண் | சரவணன் | தி.மு.க | Unopposed |
| 5 | ஜான் அ | 10 | ஆண் | அந்தோணி டி | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | Unopposed |
| 6 | ஷீலா தா | 17 | பெண் | தாஸ் செ | தி.மு.க | Unopposed |

## வார்டுகள் குழு – I - Zone - 1

| வ. எண் | பெயர் | வார்டு எண் | பாலினம் | த/க பெயர் | கட்சி | தேர்ந்தெடுக்கப்பட்ட விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | அம்மு வி | 15 | பெண் | விஜயன் பி | தி.மு.க | Unopposed |

## வார்டுகள் குழு – II - Zone – 2

| வ. எண் | பெயர் | வார்டு எண் | பாலினம் | த/க பெயர் | கட்சி | தேர்ந்தெடுக்கப்பட்ட விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | அமுதா சு | 28 | பெண் | வி. சுப்பிரமணியம் | தி.மு.க | Unopposed |

## வார்டுகள் குழு – III - Zone – 3

| வ. எண் | பெயர் | வார்டு எண் | பாலினம் | த/க பெயர் | கட்சி | தேர்ந்தெடுக்கப்பட்ட விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ராஜேந்திரன் கோ | 42 | ஆண் | கோவிந்தன் | தி.மு.க | Unopposed |

## வார்டுகள் குழு – IV - Zone – 4

| வ. எண் | பெயர் | வார்டு எண் | பாலினம் | த/க பெயர் | கட்சி | தேர்ந்தெடுக்கப்பட்ட விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஜோதிலட்சுமி. என் | 22 | பெண் | நாராயணபிரசாத் ஜி | தி.மு.க | Unopposed |

## பணிகள் குழு

**தலைவர்**: ஆசிம் ராஜா சா நா

| வ. எண் | பெயர் | வார்டு எண் | பாலினம் | த/க பெயர் | கட்சி | தேர்ந்தெடுக்கப்பட்ட விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆசிம் ராஜா சா நா | 4 | ஆண் | நாசர் சா மு | தி.மு.க | Unopposed |
| 2 | சக்திவேலன் து | 8 | ஆண் | துளசிங்கம் தி வீ | தி.மு.க | Unopposed |
| 3 | விமல் ம | 29 | ஆண் | மணி | தி.மு.க | Unopposed |
| 4 | திவ்யா தமிழ்வாணன் | 20 | பெண் | மு.க.சி தமிழ்வாணன் | தி.மு.க | Unopposed |
| 5 | சரளா செ | 39 | பெண் | செந்தில்குமார் சு | தி.மு.க | Unopposed |
| 6 | சுந்தரி கே | 19 | பெண் | கே.எஸ். கோபாலகிருஷ்ணன் | தி.மு.க | Unopposed |

அறிக்கை ஆண்டில் கீழ் கண்டவாறு கூட்டங்கள் நடைபெற்றது

## மன்றப் பொருள் விவரம் – 2022 – 2023

| வ.எண் | மாமன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | சாதாரண கூட்டம் / அவசர கூட்டம் | தீர்மான எண் |
|---|---|---|---|
| **1** | 11.04.2022 | அவசர கூட்டம் | 0-1 |
| **2** | 27.04.2022 | சாதாரண கூட்டம் | 2-104 |
| **3** | 27.04.2022 | அவசர கூட்டம் | 105-114 |
| **4** | 31.05.2022 | சாதாரண கூட்டம் | 115-205 |
| **5** | 31.05.2022 | அவசர கூட்டம் | 206-212 |
| **6** | 30.06.2022 | சாதாரண கூட்டம் | 213-293 |
| **7** | 30.06.2022 | அவசர கூட்டம் | 294-310 |
| **8** | 29.07.2022 | சாதாரண கூட்டம் | 311-503 |
| **9** | 30.08.2022 | சாதாரண கூட்டம் | 504-682 |
| **10** | 29.09.2022 | சாதாரண கூட்டம் | 683-783 |

| | | | |
|---|---|---|---|
| **11** | 29.09.2022 | சாதாரண கூட்டம் | 784-788 |
| **12** | 20.10.2022 | சாதாரண கூட்டம் | 789-977 |
| **13** | 20.10.2022 | அவசர கூட்டம் | 978-996 |
| **14** | 28.10.2022 | அவசர கூட்டம் | 0-997 |
| **15** | 31.10.2022 | அவசர கூட்டம் | 998-999 |
| **16** | 30.11.2022 | சாதாரண கூட்டம் | 1000-1194 |
| **17** | 30.11.2022 | அவசர கூட்டம் | 1195-**1197** |
| **18** | 3011.2022 | அவசர கூட்டம் | 1198-1199 |
| **19** | 29.12.2022 | சாதாரண கூட்டம் | 1200-1261 |
| **20** | 29.12.2022 | அவசர கூட்டம் | 1262-1266 |
| **21** | 20.03.2023 | சாதாரண கூட்டம் | 1267-1393 |
| **22** | 20.03.2023 | அவசர கூட்டம் | 1394-1410 |
| **23** | 25.05.2023 | சாதாரண கூட்டம் | ஒத்தி வைக்கப்பட்டது |
| **24** | 25.05.2023 | அவசர கூட்டம் | ஒத்தி வைக்கப்பட்டது |
| **25** | 07.06.2023 | சாதாரண கூட்டம் | 1411-1541 |
| **26** | 07.06.2023 | அவசர கூட்டம் | 1542-1550 |
| **27** | 03.07.2023 | சாதாரண கூட்டம் | 1551-1581 |
| **28** | 03.07.2023 | அவசர கூட்டம் | 1582-1586 |

**கூட்டம் நடைபெறாத மாதங்கள்:**

1. ஜனவரி மாதம் 2023–ல் மாமன்ற கூட்டம் நடைபெற வில்லை.
2. பிப்ரவரி மாதம் 2023–ல் மாமன்ற கூட்டம் நடைபெறவில்லை.
3. ஏப்ரல் மாதம் 22023–ல் மாமன்ற கூட்டம் நடைபெறவில்லை.

## கூட்டம் ஒத்தி வைக்கப்பட்ட மாதங்கள்:

மே மாதம் 2023–ல் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

## 4. ஆணையாளர்கள்.

அறிக்கையாண்டில் ஜீலை 2022 முதல் தற்போது வரை திரு.க.தர்ப்பகராஜ் இ.ஆ.ப அவர்கள் ஆணையராக பணிபுரிந்து வருகின்றார்.

**கண்காணிப்பாளர்**

அறிக்கையாண்டில் திருமதி.பா.செல்வராணி, அவர்கள் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறார்.

**நிர்வாகம்**

பொதுப்பிரிவு மற்றும் வருவாய் பிரிவு பணியாளர்களின் செலவுகள் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களுக்குட்பட்டு இருந்தது. அறிக்கை ஆண்டில் கோவை நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு இம்மாநகராட்சி பங்கு தொகையாக 2022–2023ஆம் ஆண்டிற்கு ரூ.3,50,000/– செலுத்தப்பட்டுள்ளது. ஊழியர் நியமனம் மற்றும் தண்டனை சம்பந்தமாக உள்ள விதிகள் வழுவாமல் கடைபிடிக்கப்பட்டது.

## 5. தகவல் மையம்

### 2022 – 2023 ஏப்ரல் முதல் மார்ச் வரை

ஆவடி மாநகராட்சி இம்மாநகராட்சியில் இயங்கும் தகவல் மையத்தில் அனைத்து பிரிவுகளிலும் உள்ள தேவையான விவரங்களை உடனுக்குடன் கொடுப்பதுடன் அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்டவாறு படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | பிறப்பு சான்றிதழ் விண்ணப்பங்கள் | 6985 |
| 2 | இறப்பு சான்றிதழ் விண்ணப்பங்கள் | 970 |
| 3 | கட்டிட அனுமதி விண்ணப்பம் | 1140 |
| 4 | சொத்துவரி பெயர் மாற்றம் விண்ணப்பம் | 475 |
| 5 | சொத்துவரி விதிப்பு கோரும் விண்ணப்பம் | 749 |

மேலும் அனைத்து சான்றிதழ்கள், கட்டிட உரிமங்கள், வரிமாற்ற உத்தரவுகள் முதலியவை தகவல் மையம் மூலம் பொதுமக்கள் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்தப்புள்ளி அளிப்பதற்கான விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததரார்களிடம் அளிப்பதற்கு தகவல் மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சான்றிதழ்கள் மற்றும் உத்தரவுகள் குறிப்பிட்ட கால அளவிற்குள் புகார் அற்ற நிலையில் பொதுமக்களுக்கு சான்றுகள் மற்றும் உத்தரவுகள் கிடைப்பதற்கு தகவல் மையம் நல்லமுறையில் செயலாற்றி வருகிறது.

## 6.புதிய கணக்கு முறை

அரசாணை எண்.3 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 12.01.2000–ன்படி மாநகராட்சிகளில் 01.04.2000 முதல் புதிய கணக்கு முறை அமுல்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது. புதிய கணக்கு முறைப்படி ஐந்தொகை கணக்குகளாக வருவாய் கணக்கு, மூலதனக்கணக்கு, கல்வி நிதி கணக்கு, குடிநீர் கணக்கு மற்றும் நூலக வரித்தொகை கணக்கு ஆகியன பராமரிக்கப்படுகிறது. ஏற்கனவே இருந்த ஒரு பதிவு **(Single Entry System)** முறை மாற்றப்பட்டு, இரு பதிவு முறை **(Double Entry System)** நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சிக்கு வரப்பெற வேண்டிய வருவாய் குறித்து இனவாரியாகவும் **(Asset)** மற்றும் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள் குறித்தும் கணக்கீடு **(Liability)** செய்து நிலை அறிக்கை **(Balance Sheet)** தயார் செய்யப்படுவதால், மாநகராட்சியின் நிதிநிலைமை குறித்து எளிதில் தெளிவாக அறிந்துகொள்ள இயலும் வகையில் புதிய கணக்கு 01.04.2000 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையரால் ஒருங்கிணைந்த இணைய வழி மென்பொருள் **(CWBS)** தயாரிக்கப்பட்டு இம்மாநகராட்சியில் 15.04.2016 முதல் நடைமுறை படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

## 7. கனிணி மயமாக்குதல் ( E- GOVERNANCE )

சொத்துவரி, தொழில்வரி அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில் உரிம கட்டணம், கட்டிட அனுமதி, பிறப்பு, இறப்பு, சான்றிதழ் போன்றவற்றினை கணினி மயமாக்கும் இ–கவர்னென்ஸ் இம்மாநகராட்சியில் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. அதன்படி திருமுல்லைவாயல், பட்டாபிராம், காமராஜநகர், மிட்டனமல்லி அலுவலக வளாகம் ஆகிய 5 பகுதியில் இடங்கள் தேர்வு செய்து, அம்மையங்களில் கணினிகள் நிறுவி அதனை மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள முக்கிய கணினியுடன் கேபிள் மூலமாக இணைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்கள் அறிய வேண்டிய விபரங்களை மேற்படி மையங்களில் அமைந்துள்ள கணிணி மையத்தின் மூலமாக எளிதில் அறிந்து கொள்ள வகை செய்யப்பட்டு உள்ளது. 28.02.2003 அன்று மாநகராட்சி அலுவலகத்தில் கனிணி தகவல் மையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் அவர்களது கடித ந.க.எண்.2897/2023//யு1, நாள். .02.2023 தேதிய கடிதத்தில் ஆவடி மாநகராட்சி விஜயந்தா மேல்நிலைப்பள்ளி விளையாட்டு திடல், HVF, ஆவடியில் 17.03.2023 முதல் 27.03.2023 வரை புத்தகக் கண்காட்சி நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. பணி மேலாளர், தீன் ஊர்தி தொழிற்சாலை, ஆவடி அவர்களது 06.03.2023 தேதியில் கடிதத்தில் மேற்படி விளையாட்டு மைதானத்தில் பொது நிதி பங்களிப்பு (CSR Fund) நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது.

## 8. பொறியியல் பிரிவு

1. அறிக்கையாண்டில் 01.04.2021 முதல் 04.03.2022 வரை திரு.கே.வைத்தியலிங்கம் அவர்கள் மாநகராட்சி பொறியாளராக பணியாற்றியுள்ளார். 04.03.2022 முதல் இந்நாள் வரை (31.03.2022) திரு.பெ.மனோகரன் உதவி செயற்பொறியாளர்.

2. திரு.M.சங்கர் அவர்கள் 01.04.2021 முதல் 12.10.2022 வரை அறிக்கையாண்டு முடிய உதவிப்பொறியாளராகப் பணியாற்றியுள்ளார். திரு.E.சத்தியசீலன் அவர்கள் 26.10.2018 முதல் இந்நாள் வரை உதவிப் பொறியாளராக பணியாற்றி வருகிறார்.

**சாலைகள், பாலங்கள், பரிசல்கள் மற்றும் கட்டிடங்கள்**

**அ. சாலைகள்.**

அறிக்கை ஆண்டில் இம்மாநகராட்சி எல்லைக்குள் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையினரால் 19.90 கிலோ மீட்டர் நீளத்திற்கு கீழ்க்கண்ட பாதைகள் பராமரிக்கப்பட்டு வந்தன.

| | | |
|---|---|---|
| 1. | பூவிருந்தமல்லி – ஆவடி சாலை | 3.60கி.மீ |
| 2. | ஆவடி சாலை | 0.70கி.மீ |
| 3. | சென்னை – திருவள்ளூர் சாலை | 11.60கி.மீ |
| 4. | பூவிருந்தமல்லி பட்டாபிராம் சாலை | 2.00கி.மீ |
| 5. | கோயில்பதாகை மெயின் ரோடு | 2.00கி.மீ |
| | மொத்தம் | 19.90கி.மீ |

**மாநகராட்சியால் பராமரிக்கப்பட்ட சாலைகள்**

| | | |
|---|---|---|
| 1. | சிமெண்ட் கான்கிரிட் சாலை | 180.64 கி.மீ |
| 2. | தார்சாலைகள் | 285.88 கிமீ |
| 3. | கப்பி சாலை | 96.48 கி.மீ |
| | | 563.00 .கி.மீ. |

## 9. மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகள்

➢ **TURIP – தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2022–23**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2022–2023 இன் கீழ் ரூ.1006.00 இலட்சம் மதிப்பீட்டில் 9.34 கி.மீ நீளத்திற்கு 32 சாலைகள் பணி நடைபெற்று வருகிறது.

**மாநில பேரிடர் நிதியின் (SDRF) 2021–22**

மாநில பேரிடர் நிதியின் (SDRF) 2021–22 இன் கீழ் 38.08 கி.மீ நீளத்திலான 134 சாலைகள் தற்காலிகமாக சீரமைக்கப்பட்டும், சேதமடைந்த 1 குடிநீர் வழங்கும் பணியும் ரூ.823.00 இலட்சத்தில் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

➢ **தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி (TNUDF) நிதி 2021–2022**

தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி (TNUDF) நிதியின் கீழ் ரூ.1580.00 இலட்சம் மதிப்பீட்டில் 21.82 கி.மீ நீளத்திற்கு 39 சாலைகள் பணி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

- **<u>தமிழ்நாடு நிலையான நகர மேம்பாட்டு திட்டம் 2021–2022 (TNSUDP) நிதி</u>**

தமிழ்நாடு நிலையான நகர மேம்பாட்டு திட்டம் (TNSUDP) நிதியின் கீழ் ரூ.1500.00 இலட்சம் மதிப்பீட்டில் 18.52 கி.மீ நீளத்திற்கு 33 சாலைகள் பணி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

- **<u>மூலதன மானிய நிதியின் (CGF) 2021-22</u>**

மூலதன மானிய நிதியின் 2021–22 கீழ் ஒரு அறிவு சார் மையம் கட்டிடம், தார் மற்றும் சிமெண்ட் சாலை 13 எண்ணிக்கைகள் மற்றும் 3 எண்ணிக்கை சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணி மற்றும் 2 எண்ணிக்கை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு online continuous effluent monitoring system அமைக்க மொத்தம் ரூ1362.55 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் சாலை பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

- **<u>இயக்குநர் மற்றும் பராமரிப்பு நிதி 2021 –22:-</u>**

இயக்குநர் மற்றும் பராமரிப்பு நிதியின் கீழ் ரூ.5.00 இலட்சத்தில் ஒரு கழிப்பிடம் சீரமைக்கும் பணி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

- **<u>Advisory Committee for Mitigation and Management of flood 2021-22</u>**

Advisory Committee for Mitigation and Management திட்ட நிதியின் கீழ் ரூ.1180.00 இலட்சத்தில் மூன்று மழைநீர் வடிகால்வாய் பணி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

- **<u>மாநில பேரிடர் வெள்ளத்தடுப்பு நிதி 2023- 24:-</u>**

மாநில பேரிடர் வெள்ளத்தடுப்பு நிதி 2023–24 கீழ் ரூ.3061.00 இலட்சம் மதிப்பீட்டில் 10 எண்ணிக்கை மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

- **<u>தமிழ்நாடு நகர்புற வேலை வாய்ப்பு திட்டம் 2021- 22:-</u>**

தமிழ்நாடு நகர்புற வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.68.52 இலட்சம் மதிப்பீட்டில் எண்ணிக்கை பசுமை உரக்குடில் பராமரிப்பு பணி முடிக்கப்பட்டுள்ளது, மீதமுள்ள 3 குளங்கள் புனரமைத்தல் பணி நடைபெற்று வருகிறது

- **<u>நமக்கு நாமே திட்டம் 2021-22</u>**

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு சிமெண்ட் சாலைப்பணி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாடில் உள்ளது. மேலும் ரூ270.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி நடைபெற்று வருகிறது.

- **<u>நமக்கு நாமே திட்டம் 2022-23</u>**

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ 478.56 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி கூடுதல் பள்ளி கட்டிடம் மற்றும் மேசை நாற்காலிகள் விநியோகம் செய்தல் பணி பணி நடைபெற்று வருகிறது

- **<u>சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22</u>**

சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 5 பணிகள் ரூ.82.76 இலட்சத்தில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

- **<u>சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022-23</u>**

சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 10 பணிகள் ரூ.156.00 இலட்சத்தில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

- **<u>நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2022-23</u>**

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 7 பணிகள் ரூ.128.70 இலட்சத்தில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

- **<u>அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் 2021-22</u>**

அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.615.00 இலட்சத்தில் வீட்டிணைப்பு வழங்கும் பணி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது

- **<u>அனைத்து குடியிருப்புகளுக்கும் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கும் திட்டம் 2021-22</u>**

அனைத்து குடியிருப்புகளுக்கும் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கு. திட்டத்தின் கீழ் ரூ.649.00 இலட்சத்தில் வீட்டிணைப்பு வழங்கும் பணி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

- **<u>தூய்மை இந்தியா திட்டம்</u>** <u>(நகர்புறம் 2.0)</u> **<u>(Swatch Bharath Mission) 2021-22</u>**

தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம் 2.0) 2021–22 கீழ் 2 சமுதாய கழிப்பிடங்கள், 2 பொது கழிப்பிடங்கள், 5 சிறுநீர் கழிப்பிடங்கள் மற்றும் 307 தனி நபர் கழிப்பிடங்கள் அமைக்க ரூ 220.42 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

- **<u>தூய்மை இந்தியா திட்டம்</u> (நகர்புறம் 2.0) (Swatch Bharath Mission) 2022-23**

தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம் 2.0) 2022–23 கீழ் 1 பொது கழிப்பிடம், 1 சிறுநீர் கழிப்பிடம் மற்றும் 300 தனி நபர் கழிப்பிடங்கள் அமைக்க ரூ 121.28 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

- **<u>தூய்மை இந்தியா திட்டம்</u> (நகர்புறம் 2.0) (Swatch Bharath Mission) 2022-23**

தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம் 2.0) 2022–23 கீழ் 4 பசுமை உரக்குடில்கள் மற்றும் 2 MRF மையம் புதியதாக அமைக்க ரூ 400.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

- **<u>தேசிய நகர்புற சுகாதார இயக்கம் (NUHM:- (National Urban Health Mission) 2021 - 22</u>**

இத்திட்டத்தின் கீழ் ஆவடி மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட விளிஞ்சியம்பாக்கம் பகுதியில் புதியதாக ஆரம்ப சுகாதார மையம் ரூ.120.00 இலட்சத்தில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

- **<u>தேசிய நகர்புற சுகாதார இயக்கம் (NUHM:- (National Urban Health Mission) 2022 - 23</u>**

இத்திட்டத்தின் கீழ் ஆவடி மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பருத்திப்பட்டு பகுதியில் புதியதாக ஆரம்ப சுகாதார மையம் ரூ.120.00 இலட்சத்தில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

- **<u>அம்ருத் 2.0 2021–22</u>**

அம்ருத் 2.0 2021–22 கீழ் 2 குளங்கள் புனரமைக்க 132.00 இலட்சத்தில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

- **<u>மாநில நிதி ஆணையத்தின் சேமிப்பு நிதி 2022–23</u>**

மாநில நிதி ஆணையத்தின் சேமிப்பு நிதி 2022–23 கீழ் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் குழாய் பதிக்க 563.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

- **<u>மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி 2022–23 (SUIDF)</u>**

மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி 2022–23 (SUIDF) கீழ் மின்சிக்கனம் மற்றும் மின்பயனீட்டு கட்டணம் குறைக்க LED விளக்குகளாக மாற்றவும் மற்றும் புதியதாக 4445 எண்ணிக்கை LED விளக்குகள் பொருத்திடவும் ரூ1419.44 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற உள்ளது.

- **<u>மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி 2022–23 (SUIDF)</u>**

மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி 2022–23 (SUIDF) கீழ் 18571 குடியிருப்புகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு ரூ995.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

- **<u>TURIP – தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2022–23 (சேமிப்பு நிதி)</u>**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (சேமிப்பு நிதி) 2022–2023யின் கீழ் ரூ.755.00 இலட்சம் மதிப்பீட்டில் 13.35 கி.மீ நீளத்திற்கு 68 சாலைகள் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

- **<u>TURIP – தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2022–23</u>**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2022–2023யின் கீழ் ரூ.941.80 இலட்சம் மதிப்பீட்டில் 14.73 கி.மீ நீளத்திற்கு 81 சாலைகள் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

- **<u>15வது நிதிக்குழு மானிய நிதி (15th CFC) 2020-21</u>**

15வது நிதிக்குழு மானிய நிதியின் (15th CFC) 2020-21 கீழ் 5 எண்ணிக்கை வாகனங்கள் கொள்முதல் செய்தல் பணி ரூ470.50 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

- **<u>15வது நிதிக்குழு மானிய நிதி (15th CFC) 2021-22</u>**

15வது நிதிக்குழு மானிய நிதியின் (15th CFC) 2021-22 கீழ் 14 நகரப்புர சுகாதார நல மையங்களில் கூடுதல் கட்டடங்கள் மற்றும் 1 ஆய்வகம் கட்டுவதற்கு ரூ372.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- **<u>15வது நிதிக்குழு மானிய நிதி (15th CFC) 2021-22</u>**

15வது நிதிக்குழுவின் மானிய நிதியின் (15th CFC) 2021-22 கீழ் சுத்திகரிப்பு நிலையங்கள், கூடாரம், பெயிலின் இயந்திரங்கள், வாகனங்கள் மற்றும் சாலைகள் அமைக்க ரூ966.00 இலட்சத்தில் பணிகள் முடிவும் பெறும் தருவாயில் உள்ளது.

- **<u>15வது நிதிக்குழு மானிய நிதி (15th CFC) 2022-23</u>**

15வது நிதிக்குழுவின் மானிய நிதியின் (15th CFC) 2022-23 கீழ் பசுமை உரக்குடில்கள் பராமரிப்பு மற்றும் குடிநீர் பிரதான குழாய் பதித்தல் பணி ரூ328.00 இலட்சத்தில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

➢ **மாநில நிதிக்குழு (SFC- URDF) 2022-23**

மாநில நிதிக்குழு (SFC-URDF) 2022-23 நிதியின் கீழ் சாலைகள் அமைக்கும் பணி 39 எண்ணிக்கை ரூ629.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

➢ **நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (NSMT) 2022-23**

நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT) 2022-23 நிதியின் கீழ் சாலைகள் அமைக்கும் பணி 38 எண்ணிக்கை ரூ687.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

➢ **TURIP – தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2022–23**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2022–2023யின் கீழ் ரூ.941.80 இலட்சம் மதிப்பீட்டில் 14.73 கி.மீ நீளத்திற்கு 81 சாலைகள் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

➢ **தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம் (NULM) வீடற்றவர்களுக்கான தங்கும் விடுதி (NULM):- (National Urban Lively Hood Mission)**

ஆவடி மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பெரியார் நகர் பகுதியில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் வீடற்றவர்களுக்கான புகலிடம் கட்டி முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

➢ **CLC :- (City Lively Hood Centre)**

பழைய மாநகராட்சி கட்டிடத்தின் மேல் தளத்தில் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கான கடைகள் அமைக்கப்பட்டு முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

➢ **பசுமை உரக்குடில் அமைத்தல் திடக்கழிவு மேலாண்மை 2021-22 திட்டம் :– (Decentralized Micro Compost Processing Plants:-**

ஆவடி மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட 17 இடங்களில் ரூ.617.00 இலட்சம் மதிப்பீட்டில் பசுமை உரகுடில் அமைத்து அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**11. காய்கறி கழிவிலிருந்து வெளியாகும் உயிரி எரிவாயு பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்தல் (Bio Methanation gas cum Power plant).**

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2021–22 கீழ் மாநகராட்சி பகுதியிலுள்ள காய்கறி அங்காடி, உணவகங்கள், திருமண மண்டபங்களிலிருந்து வீணாக எறியப்படும்

காய்கறி மற்றும் உணவுக்கழிவுகளின் மூலம் பெறப்படும் உயிரி எரிவாயு பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்ய ரூ.90.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பேரில் மேற்படி உயிரி எரிவாயு மற்றும் மின் உற்பத்தி நிலையம் கட்டி முடிக்கப்பட்டு கழிவுகளை முறையாக கையாளுதல் மூலம் வாயு தயாரித்து மின் உற்பத்தி செய்து நகராட்சிக்கு சொந்தமான ஆரம்ப சுகாதார நிலையம், தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் (NULM) வீடற்றவர்களுக்கான தங்கும் விடுதி, நவீன எரிவாயு தகன மேடை மற்றும் சமுதாய கழிப்பிடம் ஆகியவற்றின் மின் தேவையை பூர்த்தி செய்து பொது மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

➢ **<u>திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2021–22</u>**

திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2021–22 ன் கீழ் சேக்காடு உரக்கிடங்கில் குப்பைகளை தரம் பிரித்து நிலத்தினை மீட்டு எடுக்கும் பணி ரூ.425.00 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

## 12. அம்ரூத் திட்டம்

ஆவடி மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் ரூ.413.00 இலட்சம் மதிப்பீட்டில் 7 எண்ணிக்கை பூங்கா பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 11ல் செந்தில் நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 37.00 |
| 2 | வார்டு எண் 13ல் அந்தோணி நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 60.00 |
| 3 | வார்டு எண் 18ல் ஆவடி வீட்டு வசதி வாரியம் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 63.00 |
| 4 | வார்டு எண் 27ல் லாசர் நகர் 2வது (ம) 5வது தெருவில் பூங்கா அமைத்தல் பணி | 44.00 |
| 5 | வார்டு எண் 36ல் பாலாஜி நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 59.00 |
| 6 | வார்டு எண் 16ல் ஸ்ரீராம் நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 90.00 |
| 7 | வார்டு எண் 35ல் கவரபாளையம் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 60.00 |

## அம்ரூத் திட்டம் (AMRUT 2021-22)

ஆவடி மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் ரூ.406.867 இலட்சம் மதிப்பீட்டில் 4 எண்ணிக்கை பூங்கா பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 16 | வார்டு எண் 16.ல் அசோக் நிரஞ்சன் நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 146.736 |
| 2 | 16 | வார்டு எண் 16.ல் இந்திரா நகர் (சாந்தி கார்டன்) பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 34.671 |
| 3 | 6 | வார்டு எண் 6.ல் செயின்ட் பிரான்சிஸ் நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 93.730 |
| 4 | 7 | வார்டு எண் 7.ல் வெங்கடாசலம் நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 131.730 |
| **மொத்தம்** | | | **406.867** |

## 14. பொதுநிதி

மேலும் பொது நிதியின் கீழ் 381 பணிகள் ரூ.3885.28 லட்சத்தில் சாலைப்பணிகள் மழைநீர் கால்வாய், குடிநீர் மற்றும் கட்டிட பணிகள் நடைபெற்று வருகிறன

## 15. பாலங்கள் மதகுகள் மற்றும் சிறுபாலங்கள்

1. மாநகராட்சியின் பராமரிப்பில் பெரிய பாலங்கள் ஒன்றுமில்லை.
2. மதகுகளுக்காக ஆங்காங்கே முக்கியமான இடங்களில் ஆர்.சி.சி பைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. தேவையான இடங்களில் சிறுபாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## 16. பரிசல் துறை

மாநகராட்சியின் பராமரிப்பில் பரிசல்துறை ஏதும் இல்லை.

## 17. கட்டிடங்கள்

மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் யாவும் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## 18. ஓய்வு விடுதிகள் மற்றும் தங்கும் விடுதிகள்

அ. இம்மாநகரட்சியால் ஓய்வு விடுதி ஏதும் நிர்வகிக்கப்படவில்லை.

ஆ. இம்மாநகராட்சியால் சத்திரங்கள், தண்ணீர் பந்தல்கள் ஏதும் நிர்வகிக்கப்படவில்லை

இ. **கல்யாண மண்டபம்:-**

1. மாநகராட்சி நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆவடி திருமலைராஜபுரத்தில் கல்யாண மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இதில் தற்போது வட்டாட்சியர் அலுவலகம் வாடகையில் நடைபெற்று வருகிறது.
2. இம்மாநகராட்சியின் தண்டுரை பகுதியில் அறிஞர் அண்ணா என்ற பெயரில் சமுதாயக் கூடம் நிர்வகித்து வருகிறது.

## 19. அம்மா உணவகம்

ஆவடி மற்றும் திருமுல்லைவாயில் பகுதியில் 24.05.2016 முதல் அம்மா உணவகம் இயங்கி வருகிறது.

## 20.தளவாடங்களும் கருவிகளும்

அறிக்கை ஆண்டில் அலுவலக உபயோகத்திற்காக ரூ.2.65 இலட்சம் செலவில் தளவாட பொருட்கள் வாங்கப்பட்டது.

## 21. மின் விளக்குகள்

தெருவிளக்குகள் பராமரிப்பு மின்கட்டணம் செலுத்துதல் மற்றும் பணியாளர் ஊதியம் ஆகியவற்றிற்கு அறிக்கை ஆண்டில் ரூ.52827921/– செலவிடப்பட்டுள்ளது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ. | தெருவிளக்குகள் மொத்தம் | 21530 | ஆ. | குழல் விளக்குகள் | 14754 |
| இ. | சோடியம் ஆவி விளக்குகள் (250 W) | 1266 | ஈ. | சோடியம் ஆவி விளக்குகள் (150 W) | 71 |
| உ. | உயர்நிலை கோபுர விளக்குகள் | 29 | ஊ. | சிறியநிலை கோபுர விளக்குகள் | 5 |
| எ. | (CFL) விளக்குகள் 3x36 W (3 Way) | 357 | ஏ. | (CFL) விளக்குகள் 4x24 W | 43 |
| ஐ. | (CFL) விளக்குகள் 3x36 W (Single) | 1696 | ஒ. | (LED) விளக்குகள் 1x150 W | 3238 |
| ஓ. | M.H விளக்குகள் (250 W) | 71 | | | |

## 22. கல்வி

### ஆரம்பக் கல்வி

09.03.1990–ந் தேதிய கல்வித் துறை அரசாணை எண்.347.ன்படி மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த பள்ளிகள் அனைத்தும் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 01.04.1990 முதல் கல்வி துறையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. கட்டிட பராமரிப்பு பணிகள் மட்டும் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 23. பொது நூலகங்கள்

மாவட்ட நூலக ஆணை குழுவால் இம்மாநகராட்சியில் இரண்டு பொது நூலகங்கள் இயக்கப்படுகின்றது. ஆவடி வீட்டு வசதி வாரிய குடியிருப்பு அருகாமையிலும், தண்டுரை பட்டாபிராம் அருகிலும் உள்ளன.

## 24. வானொலி மற்றும் தொலைக்காட்சி

இம்மாநகராட்சியில் இரண்டு கருப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ளன. அதில் ஒன்று பருத்திப்பட்டு மற்றொன்று பட்டாபிராம் மிலிட்டெரி சைடிங்கிலும் உள்ளது. 2 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் ஆவடி மற்றும் திருமுல்லைவாயலிலும் வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 25. மருத்துவ உதவி

**அ.** இம்மாநகராட்சியில் நகர நலவாழ்வு மையம் 7 செயல்பட்டு வருகிறது.

**ஆ.** இம்மாநகராட்சி உலக வங்கி உதவியுடன் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையும் மற்றும் 6 நகர நலவாழ்வு மையங்களும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

உள்நோயாளிகள் – 1719

வெளிநோயாளிகள் – 64426

குடும்ப நல திட்ட அறுவை சிகிச்சை – 132

### 2022–2023 சாதனை விவரம்

| தடுப்பூசி | இலக்கு | சாதனை | சதவீதம் |
|---|---|---|---|
| BCG | 4875 | 4908 | 100% |
| OPV | 4875 | 4908 | 100% |
| OPV 1st Dose | 4875 | 4908 | 100% |
| OPV 2nd Dose | 4875 | 4908 | 100% |
| OPV 3rd Dose | 4875 | 4908 | 100% |
| DPT Booster | 4875 | 4908 | 100% |

| | | | |
|---|---|---|---|
| Measels | 4875 | 4908 | 100% |
| Fully Immunised | 4875 | 4908 | 100% |
| DPT 5 Years | 6765 | 6783 | 100% |
| BCG PPV 123-FI | 4875 | 4908 | 100% |
| TT 10 Years | 6878 | 6920 | 100% |
| TT 16 Years | 8851 | 8873 | 100% |

வாரந்தோறும் புதன்கிழமைகளில் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடும் எண்ணிக்கை வருடத்திற்கு மேலே கண்ட அட்டவணையில் கணக்கிடப்பட்டுள்ளது.

## 26. மருத்துவ அமைப்பும், அலுவலர்களும்

இம்மாநகராட்சி NUHM + குடும்ப நல மையங்கள் 7 குடும்ப நல மையங்கள் சேர்ந்த கட்டிடங்களில் இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை மற்றும் கருத்தடை அறுவை அரங்கும் ரூ.16.61 லட்சம் மதிப்பில் பொதுப்பணித்துறையால் கட்டி முடிக்கப்பட்டு இயங்கி வருகிறது. அதில் விளிஞ்சியம்பாக்கம் நலவாழ்வு நிலையம் இணைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 1 பெண் மருத்துவ அலுவலர்களும், 1 பகுதி சுகாதார செவிலியர்கள் (5 காலியிடம்), 19 நகர சுகாதார செவிலியர்கள், 6 பெண் உதவியாளர்கள், 1 செவிலியர். ஒரு அறுவை கூட உதவியாளர் மற்றும் ஒரு வார்டு உடனாளர், ஆகியோர் பணியாற்றுகிறார்கள். நலவாழ்வு மையங்களில் புறப்பணியாளர்களுக்கு மருத்துவம் அளிக்கப்படுகிறது. அறிக்கை ஆண்டில் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர் அவர்களிடமிருந்து, ரூ.22,50,000 லட்சத்திற்கு மருந்துகள் வாங்கி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் போலியோ நோய் தடுப்பு மருந்து, ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் போடப்பட்டது. இதனால் முறையே பிப்ரவரியில் 39985 சிறார்கள் பயனடைந்தனர்.

## 27. பிறப்பு விகிதமும் மகப்பேறு உதவியும்

இந்த ஆண்டில் 2680 பிறப்புகள் பதிவாகியுள்ளது. பிறப்பு விகிதம் குடியிருப்பு மக்களின் ஆயிரத்துக்கு 12.08% ஆகும். இம்மாகராட்சியால் பருத்திப்பட்டு தண்டுரை மற்றும் திருமுல்லைவாயல் பகுதிகளில் நடைபெற்று வந்த தாய்சேய் நல விடுதிகள் விளிஞ்சியம்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள இந்திய மக்கள் தொகை திட்டம் –5ன் மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்திய மக்கள் தொகை திட்டம்–5ன் கீழ் இயங்கும் விளிஞ்சியம்பாக்கம் மருத்துவமனையில் தாய்சேய் நலவிடுதி இணைக்கப்பட்டு மூன்று மகப்பேறு உதவியாளர்களும் மூன்று ஆயாக்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

## 28. இறப்பு விகிதமும் தொற்றும் நோய்களும்

1. இவ்வாண்டில் 1840 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டில் இறப்பு மக்கள் தொகையில் ஆயிரத்திற்கு 3.2% ஆகும். மேலும் 2022–2023ம் ஆண்டில் மக்கள் கீழ்க்கண்டவாறு நோய்களில் அவதிப்பட்டு உள்ளார்கள்.

| வ. எண் | நோயின் தன்மை | எண்ணிக்கை | இறப்பு |
|---|---|---|---|
| அ. | ஜுரம் | 968 | – |
| ஆ. | வாந்தியும் பேதியும் | 531 | – |
| இ. | சுவாசப்பை சம்மந்தமான நோய் | 4110 | |
| ஈ. | அம்மை | – | – |
| உ. | மற்ற நோய்கள் | 62791 | – |
| எ. | டெங்கு | 365 | – |

## 29. வாந்தி பேதிகள்

அறிக்கை ஆண்டில் ஆவடி மாநகராட்சி பகுதிகளில் காலரா நோயால் யாரும் பாதிக்கப்பட்டு இறக்கவில்லை.

## 30. பெரியம்மை

அறிக்கையாண்டில் ஆவடி மாநகராட்சி பகுதிகளில் பெரியம்மை கண்டதாக தகவல் ஏதும் இல்லை.

## 31. பிளேக்

அறிக்கையாண்டில் ஆவடி மாநகராட்சி பகுதிகளில் பிளேக் நோய் ஏற்படவில்லை.

## 32. மலேரியா காய்ச்சல் மற்றும் யானைக்கால் நோய் தடுப்புத் திட்டம்

இவ்வாண்டில் இந்நோயினால் யாரும் பாதிக்கப்படவில்லை. யானைக்கால் நோய் தடுப்புத் திட்டப் பணிக்கு 1 (1 காலியிடம்) களப்பணி உதவியாளரும் மற்றும் 8 பணியாட்களும் உள்ளனர்.

## 33. துப்புரவு

ஆவடி மாநகராட்சியில் இரண்டு துப்புரவு அலுவலர்கள், 5 துப்புரவு ஆய்வர்கள், 11 துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள், 159 துப்புரவுப் பணியாளர்களை கொண்டு துப்புரவுப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றது. 142 வெளிக்கொணர்வு முறையில் துய்மை பணியாளர்கள்

675 தனியார் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். மொத்தம் 65 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இம்மாநகராட்சியில் நாள்தோறும் 90 மெட்ரிக் டன் குப்பைகள் சேருவதில் 90 மெட்ரிக் டன் குப்பைகள் நாள்தோறும் சேகரம் என்ற அடிப்படையில் 47 வார்டுகளில் முதல் நிலை குப்பை சேகரித்தல் பணி கீரின் வாரியர்ஸ் என்ற நிறுவனமும், இரண்டாம் நிலை குப்பை சேகரித்தல் பணி மாநகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் மூலமும், மாநகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரைகளின்படி, இந்நகரில் உருவாகும் மக்கும் குப்பைகளை கொண்டு உரம் தயாரிக்கும் பணிக்காக 17 இடங்களில் "பசுமை உரக்குடில்" எனும் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு தற்போது 17 பசுமை உரக்குடில்களில் நாளொன்றுக்கு சுமார் 45 மெட்ரிக் டன் மக்கும் குப்பைகளை கொண்டு உரம் தயாரிக்கும் பணி பார்க்கப்பட்டு வருகிறது. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் துப்புரவு பணி சிறப்பான முறையில் பார்க்கப்பட்டு வருகிறது.

## 34. உரக்கிடங்கு

உரக்கிடங்கு ஏற்படுத்தும் பொருட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாநகராட்சி பகுதிக்குட்பட்ட சேக்காடு கிராமத்தில் ச.எண்.125/பி, 126/பி, 127/பி, 128/பி, 130/பி மற்றும் 131/பி என்ற இடம் (7.7 ஏக்கரில்) நிலம் உரக்கிடங்கு அமைக்க தகுதியானது என்று தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து சான்று பெறப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 35. திடக்கழிவு மேலாண்மை

இம்மாநகராட்சி 65 ச.கி.மீ பரப்பளவு கொண்டதாகும். இம்மாநகராட்சி 2011–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 3,44,701 ஆகும். இம்மாநகராட்சி 48 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. பொது சுகாதாரப்பணிகளுக்காக 6 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு பொது சுகாதாரப்பணிகள் செயல்பட்டு வருகின்றன. இம்மாநகராட்சியில் 93611 குடியிருப்புகள் உள்ளன. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரைகளின்படி, இந்நகரில் உருவாகும் மக்கும் குப்பைகளை கொண்டு உரம் தயாரிக்கும் பணிக்காக 17 இடங்களில் "பசுமை உரக்குடில்" எனும் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு நாளொன்றுக்கு சுமார் 45 மெட்ரிக் டன் மக்கும் குப்பைகளை கொண்டு உரம் தயாரிக்கும் பணி பார்க்கப்பட்டு வருகிறது. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் துப்புரவு பணி சிறப்பான முறையில் பார்க்கப்பட்டு வருகிறது.

## பொது சுகாதாரப்பணியாளர்களின் விவரங்கள்

| | |
|---|---|
| துப்புரவு அலுவலர் | 2 |
| துப்புரவு ஆய்வர்கள் | 5 |
| களப்பணி உதவியாளர் | 1 (1 காலியிடம்) |
| துப்புரவு மேற்பார்வையாளர் | 11 (1 காலியிடம்) |
| ஓட்டுனர்கள் | 14 (1 காலியிடம்) |
| துலக்குநர் | 3 (3 காலியிடம்) |
| துப்புரவு பணியாளர்கள் | 142 (76 காலியிடங்கள்) |
| ஆண் + பெண் = | 133 + 29 = 162 |
| கொசு மருந்து பணியாளர்கள் | 7 (4– காலியிடம்) |

## 36. பொது சுகாதாரப்பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் விவரங்கள்

| வ. எண் | வண்டியின் பெயர் | கொள்ளளவு(டன்) | வண்டி எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | டிப்பர் லாரி | 2 | 5 |
| 2 | கழிவு நீர் லாரி | 9000 லிட்டர் | 2 |
| 3 | டம்பர் பிளேசர் அதற்கான தொட்டிகள் | – | 2<br>20 |
| 4 | நாய் பிடிக்கும் வண்டி | 1 | 1 |
| 5 | காம்பாக்டர் லாரி | 6 | 3 |
| 6 | காம்பாக்டர் லாரி (மினி) | 8 | – |
| 7 | TATA AC | | 82 |
| | அதற்கான தொட்டிகள் | | 115 |

## 37. வீடு வீடாகச் சென்று குப்பைகளை மக்கும் மற்றும் மக்கா பொருள்கள் பிரித்தல் விவரம்

இம்மாநகராட்சியில் 47 வார்டுகளில், வீடு வீடாகச் சென்று குப்பைகளை மக்கும் மற்றும் மக்கா பொருட்களாகப் பிரித்து சேகரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. 48 வார்டுகளிலுள்ள 2061 தெருக்களில் மக்கள் தொகை 3,44,701 ஆகும். இம்மக்கள்

தொகையின்படி உள்ள வார்டுகளில் ஒரு நாளைக்கு வெளியேற்றப்படும் குப்பையின் அளவு 90 மெட்ரிக் டன் ஆகும்.

## 38. சிறப்பு செயல் திட்ட முறைகள்

மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில், குப்பைகள் மற்றும் கழிவுகளை முதல் நிலை குப்பை சேகரித்தல் பணி மூலம் சேகரித்து, இரண்டாம் நிலை குப்பை சேகரித்தல் பணி மூலம் மாநகராட்சி உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லும் பணியினை மிகவும் திறம்பட செய்து முடிக்க, தற்போது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், 1100 லிட் கொள்ளளவு கொண்ட காம்பாக்டர் பின்கள் 127 எண்ணங்களும், காம்பாக்டர் வாகனம் 3 எண்ணங்களும், ஹூக் லோடர் பின்கள் 4 எண்ணங்களும், ஹூக் லோடர் வாகனம் 1 எண்ணமும் மற்றும் ஜேசிபி இயந்திர வாகனம் 1 எண்ணமும் வாங்கப்பட்டு பொது சுகாதாரப் பிரிவில் பொது சுகாதாரப் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை -28, அவர்களின் உத்தரவின்படி, திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன் கீழ், ஆவடி மாநகராட்சிக்கென திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 என்ற துணை விதிகளை உருவாக்க ஆவடி பெருநகர்மன்ற தீர்மான எண்.94, நாள் 31.03.2017 மூலம் நிறைவேற்றப்பட்டு, மாவட்ட அரசிதழில் மேற்படி 12.04.2017 அன்று துணை விதிகள் வெளிவந்துள்ளது. மேற்படி திடக்கழிவு துணை விதிகள் 2016–ல், நகரில் உள்ள குடியிருப்புகள், வணிக வளாகங்கள், மருத்துவமனைகள், திரையரங்குகள், திருமண மண்டபங்கள், உணவகங்கள் மற்றும் தனியார் பள்ளி நிறுவனங்களில் திடக்கழிவுகளை பிரித்து வழங்க அறிவுறுத்தாலும், மேற்படி திடக்கழிவுகளை மாநகராட்சி வாகனம் மூலம் சேகரிக்க சேவைக்கட்டணம் வசூல் செய்யவும், மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகளை மீறுபவர்கள் மீது அபராதக் கட்டணம் வசூல் செய்யவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. இத்துணை விதிகள் மூலம் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை குறித்த அனைத்து நிலை பணிகளும் மிகவும் சிறப்பாக செய்து முடிக்கவும், நகரை மிக தூய்மையாக வைத்திருக்க உதவும் வகையிலும் அமைந்துள்ளது.

மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவின்படி, பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன் கீழ், ஆவடி மாநகராட்சிக்கென பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 என்ற துணை விதிகளை உருவாக்க ஆவடி பெருநகர்மன்ற நகர்மன்றத்தில் தீர்மான எண்.117, நாள் 05.05.2017 மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, மாவட்ட அரசிதழில் மேற்படி துணை விதிகள் வெளிவந்துள்ளது. மேற்படி திடக்கழிவு துணை விதிகள் 2016ல், நகரில் உள்ள குடியிருப்புகள், வணிக வளாகங்கள், மருத்துவமனைகள், திரையரங்குகள், திருமண

மண்டபங்கள், உணவகங்கள் மற்றும் தனியார் பள்ளி நிறுவனங்களில் திடக்கழிவுகளை பிரித்து வழங்க அறிவுறுத்தலும், மேற்படி திடக்கழிவுகளை நகராட்சி வாகனம் மூலம் சேகரிக்க சேவைக்கட்டணம் வசூல் செய்யவும், மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகளை மீறுபவர்கள் மீது அபராதக் கட்டணம் வசூல் செய்யவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. இத்துணை விதிகள் மூலம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை குறித்த அனைத்து நிலை பணிகளும் மிகவும் சிறப்பாக செய்து முடிக்கவும், நகரை மிக தூய்மையாக வைத்திருக்க உதவும் வகையிலும் அமைந்துள்ளது.

மேலும், மாநகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவின்படி, பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் கீழ், ஆவடி மாநகராட்சிக்கென பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 என்ற துணை விதிகளை உருவாக்க ஆவடி மாநகராட்சி நகர்மன்றத்தில் தீர்மான எண்.117, நாள் 05.05.2017 மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, மாவட்ட அரசிதழில் மேற்படி துணை விதிகள் வெளிவந்துள்ளது. மேற்படி பிளாஸ்டிக் கழிவு துணை விதிகள் 2016ல், நகரில் உள்ள குடியிருப்புகள், வணிக வளாகங்கள், மருத்துவமனைகள், திரையரங்குகள், திருமண மண்டபங்கள், உணவகங்களில் 50 மைக்ரான் அளவுக்கு கீழே உள்ள பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்யவோ, சேகரித்து வைக்கவோ தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், 50 மைக்ரான் அளவுக்கு மேலே உள்ள பிளாஸ்டிக் பொருட்களை தயார் செய்யவும், பயன்படுத்தவும் முறையாக மாநகராட்சியில் உரிமம் பெறவும், சேவைக் கட்டணம் செலுத்தவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிளாஸ்டிக் துணை விதிகள் 2016ஐ மீறுபவர்கள் மீது அபராதக் கட்டணம் வசூல் செய்யவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. இத் துணை விதிகள் மூலம் மாநகராட்சியில் பிளாஸ்டிக் உபயோகம் தடுக்கப்படுவதுடன், மாநகராட்சி திடக்கழிவுடன் பிளாஸ்டிக் கழிவுகளை கலப்பதும் தடுக்கப்படும் வகையிலும் துணை விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மையை நவீனப்படுத்தும் பொருட்டு, மாநகராட்சி திடக்கழிவு விதி 2000 நகராட்சி துணை விதிகளில் கூறப்பட்டுள்ள, மாநகராட்சி எல்லைக்குள் உள்ள கடைவீதிகள், நடைபாதை உணவகங்கள் ஓட்டல்கள், அலுவலகம் மற்றும் வணிக வளாகங்கள், கல்வி நிறுவனங்கள் குப்பைகளை மாநகராட்சி குறிப்பிடும் இடத்தில் குப்பை கொட்டவும், மேலும் அடுக்கு மாடிகள், தொகுப்பு குடியிருப்புகள், வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் அனைத்தும் அவரவர் குப்பைகளை, குடியிருப்பு வளாகத்திலேயே சேகரிக்கவும், மாநகராட்சி பகுதிகளிலுள்ள உணவு விடுதிகள், சாலையோர தற்காலிக கடைகள், தொழிற்சாலைகள், கட்டிட இடிபாடுகள், மருத்துவமனைக் கழிவுகள் போன்ற துணை விதிகள் 2000–ல் குறிப்பிட்டுள்ள அனைத்து குப்பை கொட்டும் நிறுவனங்கள் நிர்வாகக் கட்டணம் செலுத்தி,

குப்பைகளை எடுக்கும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட மாநகராட்சி, துணை விதி 2000ஐ செயல்படுத்தும் பொருட்டு நகரமன்ற கூட்டத்தில் வைக்கப்பட்டு நகரமன்ற தீர்மான எண்.564 நாள் 28.10.2010–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## 39. தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் (NULM)

NULM சம்மந்தமான அனைத்து உட்பிரிவுகளும் 01.06.2016 முதல் திருவள்ளூர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### சிறப்புக் கூறுகள்

இத்திட்டம் சமூக அமைப்புகள் அதிகாரம் அடைதல் என்ற கொள்கையின் அடிப்படையில் எழுந்த திட்டமாகும். பாரம்பரியமாகத் திட்டங்கள் மேலிருந்து கீழாகச் செயலாக்கப்படும் என்ற நம்பிக்கையிலிருந்து மாறுபட்டு, சமூக அமைப்புகளை அமைத்து அவற்றை முன்னேற்றம் செய்து, அவற்றின் மூலம் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளையும், வாய்ப்புகளையும் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்குச் செய்து தருவதே இத்திட்டத்தின் சிறப்பாகும்.

இந்த இலக்கினை அடைய சமூக அமைப்புகளாகிய அண்டை வீட்டுக் குழுக்கள், அண்டை வீட்டுக் கமிட்டிகள் மற்றும் சமுதாய வளர்ச்சி சங்கங்கள் ஆகியவற்றை நகர்ப்புற ஏழைமக்களுக்கான அடிப்படை வசதிகள் செய்து தருவதற்காக அந்தந்தப்பகுதிகளில் அமைக்கப்பட்டு, இத்திட்டத்திற்கு தேவையான அனைத்து உதவிகள், கடன் தொகைகளை மேற்பார்வையிட்டு வசூல் செய்தல், விண்ணப்பங்களைத் தயார் செய்தல், பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல், பகுதிகளுக்கு பொருத்தமான நல்ல பல திட்டங்களை தேர்ந்தெடுத்தல் ஆகியவைகள் சமுதாய வளர்ச்சிச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

## 40. நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம்

**இத்திட்டம் மூன்று பகுதிகளைக் கொண்டது.**

1. நகர்ப்புறத்தில் வசிக்கும் தனிநபர் ஏழைப்பயனாளிக்கு இலாபகரமான வேலைவாய்ப்புகளை அமைக்க உதவி செய்தல்

2. நகர்ப்புறத்தில் வசிக்கும் எழைப்பெண்கள் குழுவிற்கு இலாபகரமான வேலைவாய்ப்புகளை அமைக்க உதவி செய்தல், இத்துணைத்திட்டம் நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் என்று அழைக்கப்படுகின்றது.

3. பயனாளிகளுக்கு பயிற்சி அளித்தல், திறமையும் வலிமையுமிக்க பயனாளிகள் மற்றும் நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டங்களில் பங்கு பெறும் மற்ற அனைவருக்கும் சிறு தொழில்கள் முனையும் திறமையை வளர்த்துக் கொள்ள உதவிபுரிதல், நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) ஒரு சிறு தொழில் செய்ய நிதியுதவி அளிக்கப்படும். திட்ட மதிப்பீட்டில் 7% அதிகமுள்ள தொகை வட்டியில் மான்யமாக வழங்கப்படும். பயனாளிகள் மொத்த திட்ட மதிப்பீட்டில் 5 சதவிகிதத்தை பங்குத் தொகையாக செலுத்த வேண்டும். இத்திட்டத்திற்கு பெறப்பட்ட நிதி ரூ.11.50 இலட்சம் செலவு செய்யப்பட வேண்டும்.

## 41. நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மேம்பாட்டுத் திட்டம் (UWSP)

சுய வேலை வாய்ப்புத் திட்டங்களை ஏற்படுத்த விரும்பும் பெண் அல்லது பெண்களை குழுக்களாக அமைத்து செயல்படும் பொழுது அப்பெண்களின் ஆர்வத்திற்கிணங்கவும், அவர்கள் பெற்றுக் கொண்ட பயிற்சிகட்கு ஏற்பவும், தனித்தனித் திறமைக்கேற்பவும் பெண்கள் குழுக்கள் தங்கள் வருவாயைப் பெருக்கும் பல்வேறு சிறுதொழில்களில் ஈடுபடுவர். வருவாயை ஈட்டுவது மட்டுமே நோக்கம் என்று இல்லாமல் பெண் குழுக்கள் நல்ல வேலை வாய்ப்புக்களைத் தாமே உருவாக்கி, பெண்கள் தத்தம் உரிமைகளைத் தாமே நிலைநாட்டவும், பிறரைச் சாராமல் சுய சார்புடையவர்களாக இருப்பதற்கும் இத்திட்டம் வழிவகை செய்கிறது. ரூ46.07 இலட்சம் வரப்பெற்ற நிதி (2015–2016) செலவு செய்யப்பட வேண்டும்.

## 42. Training (பயிற்சி)

2020 – 2021 Step up (Training) இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்படவில்லை. எனவே பயனாளி தேர்வு செய்யப்படவில்லை.

## 43. UWSP- RF சிக்கன மற்றும் நாணயச் சங்கம்

இத்திட்டத்தின் கீழ் 2016–2017–ற்கு ரூ.9.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

## 44. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – 5 முதல் 9 வரை மற்றும் 10 முதல் 14 வரை

இம்மாநகராட்சியில் 01.07.82 முதல் மதிய உணவு திட்டம் செயல்பட்டு வந்துள்ளது. 15.09.82 முதல் இம்மநாகராட்சியில் தமிழ்நாடு அரசு புதிய உணவுத் திட்டத்தின்படி பள்ளி மையங்கள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின்படி உள்ளப் பணிகளை 06.02.83 வரை பள்ளி தலைமை ஆசிரியர்கள் கவனித்து வந்தார்கள். 07.02.83 முதல் இத்திட்டத்திலிருந்து விடுவிக்கப்பட்டு செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர் (சத்துணவு திட்டம்) அவர்களின் 27.01.83–ந் தேதிய ந.க.எண்.203069/82 செயல்முறைகளின்படி பள்ளி உணவு மையங்களுக்குத் தனியாக மைய உணவு அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டு அவர்களின் பொறுப்பில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியில் மொத்தம் 17 மையங்கள் இயங்கி வருகின்றன. இதில் 13 சத்துணவு அமைப்பாளர்களும், சமையலர்கள் 16 பேரும் உதவியாளர்கள் 16 பேரும் பணிபுரிந்து வருகின்றனர். இத்திட்டத்தின்படி மாநகராட்சிப் பள்ளிகளில் தினந்தோறும் சராசரி 3838 குழந்தைகள் பயன் பெறுகிறார்கள். 2017–2018–ம் ஆண்டில் மான்யமாக ரூ.1140509/– வரப்பெற்று உணவூட்டு செலவினமாக செலவிடப்பட்டது. (சத்துணவு பணியாளர்கள் அனைவருக்கும் 2012–2013–ம் ஆண்டு முதல் கருவூலகம் மூலம் அரசு நிதியில் ஊதியம் வழங்கப்படுகிறது. )

## 45. சந்தைகளும் விழாக்களும்

இம்மாநகராட்சியில் பிரசுரப்படுத்திய விழாவோ சந்தையோ ஏதும் நடக்கவில்லை.

## 46. தொழிற்சாலைகள்

இம்மாநகராட்சி எல்லைக்குள் தொழிற்சாலை சட்டத்தின் கீழ் 2 பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன. அவை 1. டியூப் புராடக்ட்ஸ் லிமிடெட் இந்தியா 2. கார்த்திகா இன்டஸ்ட்ரீஸ் மேலும் இராணுவத் துறையினர் டாங்க் தொழிலகமும் இராணுவ உடைகள் தைக்கும் தொழிற்சாலைகளும் நடைபெற்று வருகின்றன.

## 47. குடிநீர் விநியோகம்

சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திடமிருந்து 8.00 லட்சம் முதல் 10.50 லட்சம் லிட்டர் குடிநீர் சூரப்பட்டு சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சென்னைக்கு செல்லும் குழாய்களிடமிருந்து எடுக்கப்பட்டு ஆவடி 8 இலட்சம் முதல் 9.00 இலட்சம் லிட்டர் வரையிலும் (15 லட்சம் லிட்டர், திருமுல்லைவாயல் பகுதிகளிலுள்ள உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டிகளில் நிரப்பப்பட்டு சுமார் 42 கி.மீ நீளமுள்ள குடிநீர் பகிர்மான குழாய்களின் வழியே

934 பொதுக்குழாய்கள் மூலமாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இது தவிர நகரில் 730 ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு விசைபம்புகள் பொருத்தப்பட்டு அதன் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் 244 இந்தியா மார்க் II கைபம்புகள் மூலமும் இரண்டு பொது கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது

இது தவிர 13 மாநகராட்சி குடிநீர் லாரிகள் மூலமாக குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் நாளொன்றுக்கு நபரொன்றுக்கு 50 லிட்டர் குடிநீர் (LPCD) குடிநீர் வீதம் மொத்தம் 17.41 லட்சம் லிட்டர் குடிநீர் தினசரி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

## 48. ஆவடி மாநகராட்சி குடிநீர் திட்டம்

ஆவடி நகராட்சி சிறப்பு நிலை மாநகராட்சியாகும் இதன் மக்கள் தொகை 3,44,701 (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) ஆகும். இம்மாநகராட்சிக்கென்று தனியே குடிநீர் ஆதாரம் ஏதும் இல்லை என்ற நிலையில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் தினசரி 8 முதல் 10.50 இலட்சம் லிட்டர் வரை தண்ணீர் பெறப்பட்டு பொதுக்குழாய்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் பெறப்படும் குடிநீர் போதுமானதாக இல்லாத காரணத்தால் தனியார் ஆழ்துளை கிணறு மற்றும் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

ஆவடி மாநகராட்சி முழுமைக்கும் பகிர்மான குழாய்கள் பதித்து உயர்மட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து வீட்டுக்கு வீடு குழாய் இணைப்பு வழங்க வழிவகை செய்யும் வகையிலான ஆவடி குடிநீர் திட்டத்திற்கு ரூ.103.84 கோடி மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் துறை அரசாணை எண்.20, நாள் 22.1.2008 படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தினரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் சிப்பங்களாக பிரிக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு தற்போது முதற்கட்டமாக வார்டு 3 முதல் 14 வரை குடிநீர் வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது.

## 49. பாதாள சாக்கடை திட்டம் (JNNURM) (Under Ground Drainage)

ஆவடி மாநகராட்சி முழுமைக்குமான பாதாள சாக்கடை திட்டம் ரூ158.05 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்.62, நாள் 12.4.2008–ன்படி ரூ.158.05 கோடி மதிப்பீட்டிற்கு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டு சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் செயல்பாட்டிலுள்ளது. மேற்படி பணிகள் முதற்கட்டமாக வார்டு 1, 2 மற்றும் 48 ஆகிய

பகுதிகளில் பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் தற்போது வழங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. மேலும் வார்டு எண்.16,17,18,19,24,25,26,28,29,30 (பழைய வார்டு) பகுதிக்கு இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது.

## <u>அடிப்படை வசதிகள் திட்டம் (குடிசைப் பகுதி ) (BSUP)</u>

I. ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிசைப் பகுதிகளை கண்டறிந்து அங்கு வசிக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க பல திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. தற்போது ஆவடி நகரப் பகுதிகளில் அங்கீகரிக்கப்பட்ட 60 குடிசை பகுதிகள் உள்ளது. அங்கு வசிக்கும் சுமார் 7586 மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்ள ரூ.950.00 லட்சம் மதிப்பிலான திட்டத்திற்கு மத்திய மாநில அரசுகளின் அனுமதி பெறப்பட்டு 398 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு புதிய வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் சாலை வசதி, குடிநீர் வசதி, கால்வாய் வசதி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளும் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் மேற்படி திட்டத்தின் இரண்டாவது கட்ட பணியாக ரூ.1578.54 லட்சம் மதிப்பிலான திட்டத்திற்கு மத்திய மாநில அரசுகளின் அனுமதி பெறப்பட்டு சேக்காடு குடிசைப்பகுதிகளில் வீடற்ற ஏழை எளிய மக்களுக்கு வீடுகட்ட திட்டத்தின் கீழ் 500 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு குடிசை வீடுகளை சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைக்கப்பட்ட வீடுகளாக மேம்பாடு செய்யும் பணி முடியவுள்ளது. மேலும் மேற்படி பகுதியில் சாலை வசதி, கால்வாய் வசதி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் செய்யும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

## <u>நவீன எரிவாயு தகன மேடை (Infrastructure Gap Filling Fund 2012-13 & 2013-2014)</u>

ஆவடி மாநகராட்சி காமராஜ் நகர் சுடுகாடு மற்றும் இடுகாட்டில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி ரூ.65.00 இலட்சத்தில் மேற்படி திட்டம் 2012–13–ன் கீழ் பணிகள் முடிக்கப்பட்டு பொது மக்களின் பொது பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆவடி மாநகராட்சி மார்டன் சிட்டி (பாபு நகர்) பகுதி சுடுகாடு மற்றும் இடுகாட்டில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி ரூ.65.00 இலட்சத்தின் கீழ் பணிகள் முடிக்கப்பட்டு பொது மக்களின் பொது பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

## <u>50. சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்</u>

சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2021–2022 ஆண்டில் ரூ.71.00 லட்சம் மதிப்பில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

## ஆவடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

| Sl. No. | Name of the Work | Est. Cost |
|---|---|---|
| 1 | Providing pipeline exetention @ 7th ward , Green field Area Borewell in Avadi Municipality. (2017-18 Funds) | 500000 |
| 2 | Providing BT Road at 47th ward, IAF road Thangamani to Municipality School (163 m) | 1000000 |
| 3 | Installation of Light at Poonamallee Highways in Avadi Municipality. (10 lights, 2017-18 funds) | 800000 |
| 4 | Construction of Retaining wall at 43rd ward Sathirm Govt. High school campus in Avadi municipality. (2017-18 fund) | 500000 |
| 5 | Providing BT road at Thirumullaivoyal 7th ward, MGR nagar in Avadi Municipality. (160 m, 2017-18 fund) | 800000 |
| 6 | Construction of Additional classrooms at 15th ward Konambedu Panchayat Union Primary School, Avadi Municipality. | 1000000 |
| 7 | Providing OHT @2nd ward, Parisal Kulam in Avadi Municipality. | 1500000 |
| 8 | Construction of Library Building @ 27th ward Laazar Nagar, 5th street in Avadi Municipality. | 800000 |
| 9 | Construction of Bus shelter @ 35th ward, Kavarapalayam Anjaneyar Koil Opposite in Avadi Municipality. | 400000 |
| 10 | Providing CC Road and Favor Block and Foot path @ 17th ward, Thamarai Kulam side in Avadi Municipality. | 2000000 |
| 11 | Providing New Borewell and Pipeline extension @ 30th ward, Vivekanantha Nagar in Avadi Municipality. | 500000 |
| 12 | Construction of Compoundwall @ 36th ward, Marden city Kalaiyarangam in Avadi Municipality. | 600000 |
| 13 | Construction of Bus shelter @ 19th ward, Market mail road in Avadi Municipality. | 500000 |
| 14 | Construction of Culvert 2 Nos @ 13th ward in Avadi Municipality. | 200000 |
| 15 | Providing New Borewell and syntex tank @ 40th ward, Perumal Koil Near, Bajanaikoil street in Avadi Municipality. | 500000 |
| 16 | Construction of Children Park @ 31st ward, Near Anna statue in Avadi Municipality. | 500000 |
| 17 | Providing BT road at IAF road from Vanavil street to Thiruvalluvar street in Ward no 47 | 2500000 |

## 51. பலன் தரக்கூடிய இனங்கள்

இம்மாநகராட்சியின் வருவாயை பெருக்கும் நோக்குடன் நகர்புற வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ் பின்வரும் கட்டிடங்கள் கட்டப்பட்டு தொடர்ந்து மாத வாடகை அடிப்படையில் வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

1. காமராஜநகர் மெயின் ரோட்டில் 20 கடைகள்
2. திருமலைராஜபுரத்தில் கல்யாண மண்டபம் வட்டாட்சியர் அலுவலகம் நடைபெற்று வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | காமராஜநகர் மெயின்ரோடு வணிக வளாக கடைகள் | ரூ.5,15,832/– |
| 2. | ஆவடி நேரு பஜாரில் புதியதாக கட்டப்பட்டுள்ள 40 கடைகளின் மூலம் வருமானம் | ரூ. 41,26,320/– |
| 3. | மீன்கடைகள் – 18 எண்ணிக்கை | ரூ.8,35,200/– |
| 4. | பழைய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் மூன்று அலுவலகம் மற்றும் ஒரு கடை | ரூ.7,73,942/– |
| | **மொத்தம்** | **ரூ.62,51,294/–** |

## 52. சந்தைகள் மற்றும் இதர குத்தகை இனங்கள்

### அ. சந்தைகள்

மாநகராட்சி தினசரி அங்காடிகள் மூலம் மொத்தம் ரூ.41,00,000/– பெறப்பட்டுள்ளது. இம்மாநகராட்சி எல்லைக்குள் தனியார் சந்தைகள் ஏதுமில்லை.

### ஆ. மீன் மகசூல்

ஆவடி மாநகராட்சிக்கு சொந்தமான 9 ஏரிகளும் பொது பணி துறையால் எடுத்துக் கொள்ளப்பட்டது.

### இ. கட்டண கழிப்பிடம்

ஆவடி அண்ணா சிலை புதிய பேருந்து நிலையம் அருகில் மாநகராட்சியின் கட்டண கழிப்பிடத்திற்கு துறை மூலம் வசூலிக்கப்பட்டதில் ரூ.81,700/– வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

### ஈ. நச்சுத்தடைத் தொட்டிகள்

இவ்வினத்தின்கீழ் மாநகராட்சி வார்டுகள் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டு இந்தப் பகுதியில் உள்ள நச்சுத்தடை தொட்டிகள் சுத்தம் செய்ய ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டது. இந்த இனத்தின் கீழ் ரூ.1,51,000/– வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது.

## 53. நகர அமைப்பு

1. இம்மாநகராட்சி சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் பகுதியில் உள்ளது. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒவ்வொரு கிராமத்திற்கும் தனியாக முழுமைத் திட்ட வரைபடம் தயாரித்துள்ளது. 2021–2022ம் ஆண்டில் கட்டிட அனுமதி கோரி 1381 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதில் 806 விண்ணப்பங்களுக்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2. அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டங்கள் ஏதும் இல்லை. இதற்கு அரசிடம் இருந்து கடன் ஏதும் பெறப்படவில்லை. ஒரு நகரமைப்பு அலுவலர், ஒரு உதவி செயற் பொறியாளர் மற்றும் ஒரு சங்கலியாளர் (1 – காலியிடம்) பணிபுரிகின்றனர்.

3. இம்மாநகராட்சி நில அளவை செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆக்கிரமிப்பு உரிமம் கொடுத்தலும் இல்லை. நகரசார் ஆய்வர் யாரும் பணிபுரியவில்லை.

## 54. மற்ற வருவாய் தரக்கூடிய இனங்கள்

இம்மாநகராட்சி எல்லையில் தேசிய நெடுஞ்சாலை ஓரங்களில் இருந்த பெட்டி கடைகள் 19.12.98–ல் அகற்றப்பட்டது. தற்பொழுது பெட்டி கடைகள் மூலமாக வருமானம் ஏதும் இல்லை.

### அ. பிரிவு 81–ன் கீழ் சொத்துவரி (அரையாண்டுக்கு)

| | | |
|---|---|---|
| அ. பொதுக் காரியங்களுக்கு வரி | – | 3 % (1 %Library Cess) |
| ஆ. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வரி | – | 3.5% |
| இ. துப்புரவு பணி வரி | – | 2 % |
| ஈ. விளக்கு வரி | – | 1 % |
| உ. கல்வி வரி | – | 2.5 % |
| **மொத்தம்** | – | 12% |

### ஆ. பிரிவு 81 (3)ன் கீழ் காலிமனை வரி

**(மூலதனத்தின் பேரில் வருடத்திற்கு)**

| | | |
|---|---|---|
| அ. பொதுக் காரியங்களுக்கு வரி | – | 1/2% |
| ஆ. குடிநீர் வழங்கல் மற்றும் சாக்கடை வரி | – | 1/4% |
| இ கல்வி வரி | – | 1/4% |
| ஈ. விளக்கு வரி | – | 1/8% |
| உ. கக்கூஸ் வரி | – | 1/8% |
| **மொத்தம்** | – | 1½% |

## இ. வண்டி வாகன வரி வகைகள்

இவ்வினத்தின் கீழ் அறிக்கையாண்டில் வருமானம் ஏதுமில்லை.

## 55. கேட்பு. வசூல், நிலுவை

வரி மற்றும் வரியில்லா இனங்களின் கீழ் அறிக்கை ஆண்டில் வசூலாக வேண்டியதும் வசூலானதும் விபரங்கள்

(ரூ லட்சத்தில்)

| விபரம் | கேட்பு ரூ. | வசூல் ரூ. | வரிவஜா | பாக்கி ரூ. |
|---|---|---|---|---|
| சொத்து வரி | 3841.55 | 2551.59 | – | 1289.96 |
| வரியில்லா இனம் | 142.79 | 117.75 | – | 25.05 |

ஆவடி மாநகராட்சியில் 01.04.2022 முதல் அமலாக்கப்படும் பொது சொத்து வரி சீராய்வு மற்றும் திருத்தியமைக்கப்படும் மண்டல அடிப்படை மதிப்பு குறித்த, ஆவடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 25/1981 பிரிவு 118ன் கீழ், தமிழக அரசின் அரசாணை (நிலை) எண்.53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022ன் படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –28 அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படியும், ஆவடி மாநகராட்சியில் 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு கீழ்க்கண்ட விவரப்படி மண்டலம் மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**சொத்துவரி**

| மண்டலம் | மண்டல மதிப்பீடு (ரூ) | புதிதாக நிர்ணயிக்கப்படும் மண்டல மதிப்பு. | | |
|---|---|---|---|---|
| | | பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கான காரணி | புதிய மண்டல மதிப்பு (ரூ.) |
| A | 1.70 | **குடியிருப்பு 600 ச.அடி வரை** | 1.25 | 2.13 |
| | | 601–1200 | 1.50 | 2.55 |
| | | 1201–1800 | 1.75 | 2.97 |
| | | 1801 க்கு மேல் | 2.00 | 3.40 |
| | | **குடியிருப்பு அல்லாதவை கல்வி நிறுவனம்** | 1.75 | 2.97 |
| | | தொழிற்சாலை | 1.75 | 2.97 |
| | | வணிகம் | 2.00 | 3.40 |
| B | 1.30 | **குடியிருப்பு 600 ச.அடி வரை** | 1.25 | 1.63 |
| | | 601–1200 | 1.50 | 1.95 |
| | | 1201–1800 | 1.75 | 2.27 |
| | | 1801 க்கு மேல் | 2.00 | 2.60 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **குடியிருப்பு அல்லாதவை** | 1.75 | 2.27 |
| | | கல்வி நிறுவனம் | 1.75 | 2.27 |
| | | தொழிற்சாலை | 2.00 | 2.60 |
| C | 1.10 | **குடியிருப்பு** 600 ச.அடி வரை | 1.25 | 1.37 |
| | | 601–1200 | 1.50 | 1.65 |
| | | 1201–1800 | 1.75 | 1.92 |
| | | 1801 க்கு மேல் | 2.00 | 2.20 |
| | | **குடியிருப்பு அல்லாதவை** கல்வி நிறுவனம் | 1.75 | 1.92 |
| | | தொழிற்சாலை | 1.75 | 1.92 |
| | | வணிகம் | 2.00 | 2.20 |

**காலிமனை வரி**

| **தற்போதைய மண்டலம்** | **பழைய மண்டல மதிப்பீடு (ரூ)** | **புதிய மண்டல மதிப்பு (ரூ)** |
|---|---|---|
| A | 0.40 | 0.80 |
| B | 0.50 | 1.00 |
| C | 0.60 | 1.20 |

மேலும் மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

1. 600 சதுர அடிக்கு குறைவாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 25% செத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

2. 601 முதல் 1200 சதுரடி வரை பரப்பை உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

3. 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பை உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

4. 1800 சதுரடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

5. வணிக நிறுவனங்களுக்கு / வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில், வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

6. தொழிற்சாலை மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

7. காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100% உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டிடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கும் சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி விதிப்பு செய்யப்பட வேண்டும்.

## II. – வருடாந்திர சொத்துவரி உயர்வு

**ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி சதவீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.**

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுப்பட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிடப்பட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| பொது பயன்பாடு | குடிநீர் (ம) வடிகால் | கல்வி வரி | நூலக வரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 6% | 3.5% | 2.5% | 10% Included in total Basic Property Tax | 12% |

மேற்கண்ட கூறுகளில் கல்வி வரி தனியாக வருடாந்திர மதிப்பில் கணக்கிடப்படும். மேற்கண்டவாறு திருத்தியமைக்கப்படும் அனைத்து இனங்களும் 01.04.2022 முதல் அமலாக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் அதிக சதவீதம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## பொது மூலதனக் கணக்குகள்

**இவ்வாண்டில் எல்லா கணக்குகளின் கீழ் வரவு , செலவு முறையே 2021–2022**

ரூ. லட்சத்தில்

| விபரம் | வருவாய் நிதி | குடிநீர் நிதி | கல்வி நிதி |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| வரவு | 48,39,78,640 | 5,32,16,358 | 1,65,43,004 |
| செலவு | 85,04,66,299 | 5,29,12,520 | 70,18,475 |

## 56. தொழில்வரி

ரூ. லட்சத்தில்

| கேட்பு | | | வசூல் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் | வரிவஜா | நிலுவை |
| 296.85 | 367.88 | 664.73 | 64.46 | 306.31 | 370.78 | – | 293.95 |

**57. (அ) இந்த ஆண்டில் அரசினிடம் இருந்து கீழ்க்கண்ட மான்யங்கள் பெறப்பட்டன.**

ரூ. லட்சத்தில்

| | | |
|---|---|---|
| 1 | சட்டமன்ற உறுப்பினர் நிதி | 53.00 |
| 2 | உரக்கிடங்கு மான்யம் (சி.எம்.டி.ஏ உள்ளாட்சி நிதி) | – |
| 3 | அடிப்படை வசதிகள் திட்டம் | 750.00 |
| 4 | குடும்ப நலதிட்ட மான்யம் | 511.48 |
| 5 | எம்.பி நிதி | 15.00 |
| 6 | மாநில நிதி | – |
| 7 | 13 வது நிதிக்குழு | – |
| 8 | சத்துணவு திட்டப்பழுது | – |
| 9 | பகுதி –2 திட்டம் | – |
| | DROUGHT RELIEF | – |
| | SJSRY Wage employment | – |
| 9 | வெள்ள நிவாரண திட்டம் (Natural Calameties) | 750.00 |
| 10 | Infra Gap filling fund | – |
| 11 | O&M Gap filling fund | – |
| 12. | Plastic Road | – |
| 13. | SRP 2014-2015 | 1577.80 |
| 14. | பூங்காக்கள் அபிவிருத்தி | 374.00 |
| 15. | நகர வளர்ச்சி திட்டம் (City Livelyhood Centre) | 18.00 |

**மூலதன செலவுகள்**

| | | |
|---|---|---|
| 1 | சாலைகள் | 31,50,84,371 |
| 2 | தளவாடங்கள் | 23,76,295 |
| 3 | வாகனங்கள் | 48,48,696 |
| 4 | வடிகால் மற்றும் கல்வெர்ட் | 6,05,74,897 |
| 5 | கட்டிடங்கள் | 2,45,89,685 |
| 6 | ஆரம்ப கல்வி கணக்கு | 1,83,46,315 |
| 7 | நீரளிப்பு கணக்கு | 2,17,56,463 |

**ஆ. கடன்கள்**

நிதியாண்டில் பெறப்பட்ட முந்தைய ஆண்டில் பெறப்பட்ட கடன்களின் அசல் மற்றும் வட்டி உரிய காலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

## இ. முதலீடுகள்

இந்த ஆண்டு வட்டியுடன் சேர்த்து முதலீடுகள் தொகை ரூ.6,49,85,920/– உள்ளது.

## 58. தணிக்கை

அறிக்கை ஆண்டில் 2022–2023 முடிய கணக்குகள் தணிக்கை முடிவுற்றுள்ளது. தணிக்கை அறிக்கை பெறப்பட்டுள்ளது. உடன் நிகழ் தணிக்கை இம்மாநகராட்சியில் உள்ளதால் கணக்குகளின் பேரில் உடனுக்குடன் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2022 – 2023–ம் ஆண்டில் ஆரம்பத்தில் கல்வி நிதி– 82, குடிநீர் நிதி – 176 மற்றும் பொது நிதி – 514 மொத்தம் 772 தணிக்கை தடைகள் நிலுவையில் இருந்தது.

## 59. குடும்ப நலத்திட்டம்

குடும்ப நல திட்டத்தின் கீழ் பின்வருமாறு அறுவை சிகிச்சை மற்றும் இதர சாதனங்கள் மூலம் பிறப்புகள் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| 2022 – 2023 | | | | |
|---|---|---|---|---|
| | | **குறியீடு** | **சாதனை** | **விழுக்காடு** |
| 1 | கருத்தடை அறுவை | 2678 | 2155 | 84% |
| 2 | ஐ.யூ.டி. | 1440 | 1427 | 99% |
| 3 | வாய்வழி மாத்திரை | 150 | 147 | 98% |
| 4 | நிரோத் | 150 | 147 | 98% |

## 60. பொது

அறிக்கை ஆண்டில் பொது மக்களுக்கு போதிய வசதிகள் செய்தும் மாநகராட்சிப் பணியாளர்களுக்கு கால தாமதமின்றி ஊதியம் மற்றும் அனைத்து சலுகைகளும் வழங்கப்பட்டன. பொது சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்த டிஜிட்டல் பேனர்கள், ஸ்டிக்கர்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் அச்சடித்து விநியோகிக்கப்பட்டுள்ளது. ஒலிபெருக்கி விளம்பரம், பள்ளிக் குழந்தைகளுக்கான முகாம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நிர்வாகம் செம்மையாக செயல்பட ஒத்துழைப்பு நல்கி நிர்வாகத்திற்கு உதவியாக இருந்த பிரிவு தலைவர்கள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள் மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையர்,
ஆவடி மாநகராட்சி.

26/6/2023
26.6.23

இடம் : ஆவடி
நாள் : 26.6.2023